வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி-13.6.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

முன்னேறிய நாடு ஒன்றை உருவாக்க, படித்த, ஆரோக்கியமான, பொறுப்பான குடிமக்கள் அவசியம் என்று, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்

.

புதுடெல்லியில் பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட முக்கிய அலுவலகங்களுக்கான, சேவா தீர்த் கட்டிட வளாகத்தை, இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

**பணியிடங்களில் பெண்களின் பாதுகாப்பு** குறித்த, தேசிய மாநாடு, புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ளது.

ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ், திருக்காஞ்சியில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள, மேம்படுத்தப்பட்ட குடிநீர் திட்டத்தை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று தொடக்கி வைத்தார்.

முர்மு

முன்னேறிய நாடு ஒன்றை உருவாக்க,வலுவான பொருளாதாரம், மற்றும், ஸ்திரமான அரசியல் சூழலுக்கு அப்பாற்பட்டு, படித்த, ஆரோக்கியமான, பொறுப்பான குடிமக்களும் அவசியம் என்று, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில்,

அனைத்து பிரிவினரின் அதிகாரப் பங்கேற்புடன் கூடிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதற்கான, நாடு தழுவிய கர்மயோகா இயக்கத்தில் உரையாற்றிய அவர், மக்கள் பங்கேற்பு இல்லாவிட்டால், நாட்டின் எந்த ஒரு குறிக்கோளையும், எட்டுவது கடினம் என்றார். தார்மீகம் மற்றும் ஆன்மிகத்துடன் ஒருங்கிணைந்த முன்னேற்றமே, முழுமையான, சமநிலை முன்னேற்றமாக இருக்க முடியும் என்பதால், மக்கள் பலனைப் பற்றி கவலைப்படாமல், அர்ப்பணிப்பு உணர்வுடன் கடுமையாக உழைக்க வேண்டும் என குடியரசு தலைவர் வலியுறுத்தினார்.

மோடி-கட்டிடம்

புதுடெல்லி கர்த்தவ்ய பாத்தில், பிரதமர் அலுவலகம், மத்திய அமைச்சரவைச் செயலகம் உள்ளிட்ட முக்கிய அலுவலகங்களுக்கான, சேவா தீர்த் கட்டிட வளாகத்தை, இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி திறந்து வைத்தார். பிஎம்-ராஹத் திட்டத்தின் கீழ் விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள், மற்றும் நலிவடைந்த பிரிவினரின் நலனுக்கான பல்வேறு முடிவுகள் குறித்த கோப்புகளில், புதிய அலுவலகத்தில் வைத்து பிரதமர் கையெழுத்திட்டார்.

பல்வேறு மத்திய அமைச்சகங்களுக்கான 2 கர்த்தவ்ய பவன் கட்டிடங்களையும், பிரதமர் இன்று மாலை திறந்து வைத்து, சேவா தீர்த் கட்டிட விழாவில் உரையாற்றுகிறார்.

மக்களின் தேவைகளுக்கு ஏற்ற, மக்களால் எளிதில் அணுகதக்க, திறம்பட்ட, நவீன நிர்வாக வசதிகளை, நாட்டிற்கு வழங்குவதில், பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு உள்ள உறுதிப்பாட்டின் பிரதிபலிப்பாக, இப்புதிய கட்டிடங்கள் அமைந்துள்ளன. பொது மக்கள் மற்றும் ஊழியர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும், பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் அவசரகால ஏற்பாடுகளும், இக்கட்டிடங்களில், முழு அளவில் இடம் பெற்றுள்ளன.

*மோடி-வானொலி*

இன்று உலக வானொலி தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி, தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டுள்ளார். நகரங்கள் முதல் கிராமங்கள் வரை எல்லா இடங்களிலும், மக்களின் நம்பகமான குரலாக திகழும் வானொலியை கொண்டாடும் நாளாகவும், வானொலி ஊடகத்துடன் சம்பந்தப்பட்ட அனைவரின் முயற்சிகளையும் அங்கீகரிக்கும் தருணமாகவும், இந்நாள் அமைவதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறி உள்ளார். மக்களுக்கான தகவல்களை உடனுக்குடன் வழங்குவதிலும், திறமைகளை ஊக்குவித்து, படைப்பாற்றலைப் பெருக்குவதிலும், வானொலி முக்கிய பங்காற்றி வருவதை அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

நாட்டு மக்களின் ஒட்டுமொத்த சமூக வலுவை வெளிக் கொணர்வதில் வானொலிக்கு பெரும் சக்தி இருப்பதை, மன்-கி-பாத் நிகழ்ச்சி மூலம் தாம் உணர்ந்து இருப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார். வரும் 22-ஆம் தேதி ஒலிபரப்பாக உள்ள, அடுத்த மன் கி பாத் நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டிய கருத்துக்களை, பொது மக்கள் பகிர்ந்து கொள்ளலாம் என்றும், அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

*மோடி-அசாம்-1*

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை அசாமிற்கு பயணம் மேற்கொண்டு, குவஹாத்தியில், 5 ஆயிரத்து 450 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களைத் தொடக்கி வைக்கிறார். இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு..........

நாளை காலை பத்தரை மணி அளவில், தீப்ருகார் அருகே, மோரான் புறவழிச் சாலையில் உள்ள, அவசரகால விமான ஓடு பாதையில் தரையிறங்கும் பிரதமர், அங்கிருந்து, போர் விமானங்கள், போக்குவரத்து விமானங்கள், மற்றும், ஹெலிகாப்டர்களின் வான் சாகசக் காட்சிகளை பார்வையிடுகிறார். பிரம்மபுத்ரா நதியின் குறுக்கே, 3 ஆயிரம் கோடி ரூபாய்

செலவில் கட்டப்பட்டுள்ள, குமார பாஸ்கர வர்மன் பாலத்தை, நாளை மதியம் பிரதமர் திறந்து வைக்கிறார். ஐஐஎம்-குவஹாத்தி உயர்கல்வி நிறுவனத்தையும், காம்ரூப் மாவட்டத்தின் அமிங்காம் பகுதியில் நிறுவப்பட்டுள்ள, வடகிழக்கு மாநிலங்களுக்கான, தேசிய தரவுகள் மையத்தையும், நாளை பிரதமர் திறந்து வைப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*நாடாளுமன்றம்*

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் கட்ட அமர்வுகள் இன்று முடிவடைந்து, இரு அவைகளும் அடுத்த மாதம் 9-ஆம் தேதி வரை ஒத்தி வைக்கப்பட்டன. பட்ஜெட் கூட்டத் தொடரின் 2-ஆம் கட்ட அமர்வுகள், அன்றைய தினம் தொடங்கி, ஏப்ரல் 2-ஆம் தேதி வரை நடைபெறும்.

*ராகுல் தீர்மானம்*

மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்திக்கு எதிராக பாரதிய ஜனதா எம்பி திரு நிஷிகாந்த் துபே முன் மொழிந்துள்ள பொருண்மை தீர்மானத்தை, அடுத்த கட்டமாக, உரிமைக் குழு அல்லது நன்னெறி குழுவிற்கு அனுப்பலாமா, அல்லது, நேரடியாக அவையில் விவாதத்திற்கு கொண்டு வரலாமா என்பது குறித்து, மக்களவைத் தலைவருடன் கலந்து பேசி முடிவெடுக்கப்படும் என, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார். ஆயினும், திரு துபே தீர்மானம் கொண்டு வந்து விட்டதால், திரு ராகுல்காந்திக்கு எதிராக, அரசுத் தரப்பில் இப்போதைக்கு தீர்மானம் கொண்டு வர வேண்டாம் என அரசு முடிவு செய்திருப்பதாக, அவர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

*மகளிர் பாதுகாப்பு*

**பணியிடங்களில் பெண்களின் பாதுகாப்பு** குறித்து, மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேசிய மாநாடு, புதுடெல்லியில் நாளை நடைபெற

உள்ளது. பணியிடங்களில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் தொல்லைகளை தடுப்பதற்கான சட்டத்தின் அமலாக்கத்தையும், இதற்கான, ஷி-பாக்ஸ் ஆன்-லைன் வசதியின் செயல்பாடுகளையும் வலுப்படுத்தும் நோக்கத்துடன், இம்மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி, இணை அமைச்சர் திருமதி சாவித்ரி தாக்கூர் மற்றும் பல்வேறு மத்திய-மாநில அரசுத் துறைகளின் அதிகாரிகள் இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

*கைலாஷ்நாதன்*

மத்திய அரசின் ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ், புதுச்சேரியில், மங்கலம் தொகுதிக்கு உட்பட்ட திருக்காஞ்சியில், 2.18 கோடி ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, மேல்நிலை நீர்த் தேக்க தொட்டியுடன் கூடிய, மேம்படுத்தப்பட்ட குடிநீர் திட்டத்தை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று தொடக்கி வைத்தார். முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார் உள்ளிட்ட அமைச்சர்கள் கலந்து கொண்டனர். திருக்காஞ்சி மற்றும் சுற்று வட்டாரத்தில், சுமார் 3 ஆயிரம் பேர் இத்திட்டத்தினால் பயன் பெற உள்ளனர்.

திருபுவனை தொகுதிக்கு உட்பட்ட விநாயகம்பட் கிராமத்தில், 2.85 கோடி ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, மேல்நிலை நீர்த் தேக்க தொட்டியுடன் கூடிய, மேம்படுத்தப்பட்ட குடிநீர் திட்டமும், இன்று தொடக்கி வைக்கப்பட்டது. அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் திரு அங்காளன் ஆகியோர் முன்னிலையில் முதலமைச்சர் திரு ரங்கசாமி இத்திட்டத்தை தொடக்கி வைத்தார். இன்று முதலமைச்சர் கலந்து கொண்ட பல்வேறு நிகழ்ச்சிகள் குறித்து ஒரு தொகுப்பு................

நெட்டப்பாக்கம் தொகுதிக்கு உட்பட்ட கரியமாணிக்கம் கிராமத்தில், 3.20 கோடி ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோக திட்டத்தையும் முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்தார். கரியமாணிக்கத்தில் முன்னாள் முதலமைச்சர் வெங்கடசுப்பா ரெட்டியார் திருமண மண்டபத்தை புதுப்பிக்கும் பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டினார். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலமாக, சலவைத் தொழிலாளிகள், மருத்துவ மரபினர் மற்றும் இசைக் கலைஞர்களுக்கு, தொழில் கருவிகளை அவர் வழங்கினார். நெட்டப்பாக்கம் கொம்யூன் பஞ்சாயத்து சார்பில், ஞாயிற்றுக் கிழமைகளில் இயங்கும் வகையிலான, என் ஆர் பவள விழா வாரச் சந்தையை, கரியமாணிக்கத்தில் முதலமைச்சர் தொடக்கி வைத்தார். தொடர்ந்து முதலமைச்சரின் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ராஜீவ்காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரியில் பணி புரியும் 22 பல்நோக்கு ஊழியர்களுக்கு, பதவி உயர்வு ஆணைகளும் வழங்கப்பட்டன.

*ரங்கசாமி* (5)

இன்று மாலை ஏம்பலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதனுடன் இணைந்து, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த மாணவ-மாணவிகளுக்கு, இலவச மடிக் கணினி வழங்கும் பணிகளை, தொடக்கி வைத்தார்.

*காரைக்கால்*

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, நாளை காரைக்கால் வர இருப்பதை ஒட்டி, காரைக்கால் மாவட்டம் முழுவதும், டிரோன்கள், பலூன்கள் மற்றும் இதர வான்வழி சாதனங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஒரு பகுதியாக நாளை காரைக்காலில் மதுக்கடைகளை மூடவும், மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

*வானிலை*

நில நடுக்கோட்டிற்கு அருகில் உள்ள இந்திய பெருங்கடலின் கிழக்கு பகுதிகள், மற்றும், அதை ஒட்டிய தென் கிழக்கு வங்க கடல் பகுதிகளில், வரும் 15-ஆம் தேதி வாக்கில், காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகலாம் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, இன்றைய தினம், நெல்லை மாவட்டத்தின மலைப்பகுதிகள், மற்றும், தேனி, தென்காசி, குமரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், நாளை முதல், வரும் 17-ஆம் தேதி வரை, தமிழ்நாடு, புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவும் என்றாலும், 18-19 ஆகிய தேதிகளில் லேசான மழை பெய்யக் கூடும் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் குறைந்த பட்சமாக, உதக மண்டலத்தில், 6.8 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது.

*ஆடவர் கிரிக்கெட்*

உலக கோப்பைக்கான ஐசிசி ஆடவர் 20-ஓவர் கிரிக்கெட் தொடரில் இன்று மாலை சென்னையில் நடைபெறும் போட்டியில், அமெரிக்கா-நெதர்லாந்து அணிகள் மோத உள்ளன. ஆஸ்திரேலியா-ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையே, இன்று கொழும்பில் நடைபெற்ற போட்டியில், ஜிம்பாப்வே அணி, 23 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. டெல்லியில் இன்று நடைபெறும் மற்றொரு போட்டியில், கனடா அணியால் நிர்ணயிக்கப்பட்ட, ----- ரன் என்னும் வெற்றி இலக்கை நோக்கி, 2-ஆவதாக ஆடும் யுஏஇ அணி, சற்று முன் வரை, -----------ஓவர்களில், --------விக்கெட் இழப்பிற்கு, ரன் எடுத்திருந்தது.

*பல்லுயிர் பெருக்கம்*

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும், தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையம், தனது ஆராய்ச்சிகள் மற்றும் இயற்கை ஆதாரங்களை, தொழில் துறையினருக்கு வழங்கி, அதன்

மூலம் கிடைக்கும் பலன்களை, உள்ளூர் விவசாயிகள் உட்பட பல்வேறு தரப்பினருடன் பகிர்ந்து கொள்ளும் வகையிலான, ABS திட்டத்தின் கீழ், கடந்த 45 நாட்களில், 2 கோடியே 40 லட்சம் ரூபாய் வருமானம் ஈட்டி உள்ளது. உள்ளூர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் அதேவேளை, அடித்தட்டு நிலையில், பல்லுயிர்ச் சூழலை பாதுகாக்கவும், இதனால் ஏதுவாகும் என, அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*சென்னை-மாநாடு*

மத்திய அறிவியல்-தொழில் நுட்பத் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் நாளை சென்னையில், ஆராய்ச்சித் துறையினர், ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள், தொழில் முனைவோர் மாநாட்டை தொடக்கி வைக்கிறார். மத்திய அறிவியல்-தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் சென்னை மற்றும் காரைக்குடி பிரிவுகள் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த 2 நாள் மாநாடு, புதுமைப் படைப்புகள் மூலம் வளர்ச்சியைப் பெருக்குவதில், சம்பந்தப்பட்ட அனைத்து பிரிவினருக்கான பொது மேடையாக அமைய உள்ளது. மாநாட்டின் போது, மத்திய அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கழகத்திற்கும், உயர்கல்வி நிறுவனங்களின் புத்தொழில் ஆதரவு மையங்களுக்கும் இடையே, விரிவான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. மாநாட்டின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சியில், நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள், தங்களின் புதுமை படைப்புகளை காட்சி படுத்த உள்ளன.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

முன்னேறிய நாடு ஒன்றை உருவாக்க, படித்த, ஆரோக்கியமான, பொறுப்பான குடிமக்கள் அவசியம் என்று, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்

.

புதுடெல்லியில் பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட முக்கிய அலுவலகங்களுக்கான, சேவா தீர்த் கட்டிட வளாகத்தை, இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

பணியிடங்களில் பெண்களின் பாதுகாப்பு குறித்த, தேசிய மாநாடு, புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ளது.

ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ், திருக்காஞ்சியில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள, மேம்படுத்தப்பட்ட குடிநீர் திட்டத்தை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று தொடக்கி வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------